

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட வள்ளவிளை பகுதிகளில் பாதுகாப்பு பணிகள் குறித்து இன்று (01.06.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செ.வெ.எண்: 317/2016 நாள்: 01.06.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேரில் ஆய்வு.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை காலம் தொடங்குவதை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட வள்ளவிளை, தூத்தூர், சின்னத்துறை ஆகிய பகுதிகளுக்கு இன்று (01.06.2016) நேரில் பார்வையிட்டு, பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு செய்தார். வள்ளவிளை, எடப்பாடு மேற்கு கடற்கரையோரம் ரூ.2.81 கோடி செலவில் நடைபெற்று வரும் தடுப்பு சுவர் அமைக்கும் பணியினையும், தூத்தூர், சின்னத்துறையில் ஏற்பட்ட கடலரிப்பு பகுதிகளுக்கு, தேங்காய்பட்டணத்திலிருந்து மூட்டைகளில் மணல் நிரப்பி எடுத்து செல்லும் பணியினையும் ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. டி.ஹெட்சி லீமா அமலினி, உதவி செயற்பொறியாளர் (கடலிரிப்பு) திரு. வேதஅருள்சேகர், உதவி பொறியாளர் திரு. தாணுமூர்த்தி, இளநிலை பொறியாளர் திரு. செல்லதுரை, கொல்லங்கோடு பேரூராட்சி செயல் அலுவலர் திரு. கதிர்வேல், வள்ளவிளை பங்குதந்தை கென்னடி, வருவாய் ஆய்வாளர் திருமதி. லீலாபாய் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.